FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364107

1. District : ஈரோடு PS: ஊ.து.க.பிரிவு, ஈரோடு Year: 2026 FIR No.: 09/ACL/2026 Date: 13.10.2026 07.00
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : நாள் முதல் Date to : 2026 செப்டம்பர் கடைசி வாரத்திலிருந்து 06.10.2026 வரை
   குற்ற நிகழ்வு நாள்
   Time Period : Time from : நேரம் முதல் Time to : உரை
   நேர அளவு நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 13.10.2026 Time : 06.00
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) GD-VOL-II 13.10.2026 Time : 06.00
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுந்து மூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கொடுமுடி நாளுகா அலுவலகம், சுமார் 40.கி.மீ. தெற்கு.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. சிவசிரக்சிவி (b) Father's/ ~~Husband's~~ Name : செல்லமுத்து (கூ)
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth 06.10.1998 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் வேளாண் தொழில் (g) Address : எண், 32, பூவாவலசு, முருங்கியாம்பாளையம் தாண்டாம் பாளையம் (போ), கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி. பரிமளாதேவி, தாசில்தார், பட்டாசியர் அலுவலகம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

C. Sivasankaran 13.10.2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

K. Murthi 13/10/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 13.10.2026 07.45
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. மூர்த்தி
Rank: நிலை தலைமை காவல் தலைமை காவலர்
உ.கா.க. பிரிவு,
ஈரோடு.

Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 09/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (amendment) Act, 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் K.சாந்தி ஆகிய நான் 13.10.2026 தேதி காலை 06.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது செ.சிவசிரஞ்சீவி, த.பெ. லேட்.செல்லமுத்து, எண்.32, பூலாவலசு, முருங்கியாம்பாளையம் கிராமம், தாண்டாம்பாளையம் அஞ்சல், சிவகிரி வழி, கொடுமுடி தாலுக்கா, ஈரோடு 638109 என்பவர் நிலையம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டிருந்த ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல் செ.சிவசிரஞ்சீவி த.பெ. லேட்.செல்லமுத்து எண்.32, பூலாவலசு, முருங்கியாம்பாளையம் கிராமம், தாண்டாம்பாளையம் அஞ்சல், சிவகிரி வழி, கொடுமுடி தாலுக்கா, ஈரோடு-638109. பெறுதல் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கருங்கல்பாளையம், ஈரோடு. அய்யா / அம்மா, நான் மேற்கண்ட விலாசத்தில் என்னுடைய குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் பேக்கரி வைத்து தொழில் செய்து வருகிறேன். எனக்கு ஈரோடு மாவட்டம் கொடுமுடி தாலுக்கா முருங்கியாம்பாளையம் கிராமத்தில் 1.41 ஏக்கர் விவசாய பூமி மற்றும் வீடும் பூர்விகவகையில் பாத்தியப்பட்டுள்ளது. மேற்படி சொத்தானது, கொடுமுடி சார்புநீதிமன்றம் OS No.356/2024ன்படி இதர வாரிசுதாரர்களுக்கு உரிய தொகை செட்டில் செய்யப்பட்டு, ரி.ச.எண்.65/4A-ல் வீட்டுடன் கூடிய 16 சென்ட் நிலமும், ரி.ச.எண்.65/4B-ல் 1.25 ஏக்கர் நிலமும் எனக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டதாகும். இதில் 1.25 ஏக்கர் நிலம் அமைந்துள்ள சர்வே எண் 65/4B-க்கு வருவாய்த்துறை நத்தம் சம்மந்தப்பட்ட ஆவணத்தில் நிறுத்தப்பட்டது என தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற தீர்ப்பினை பதிவு செய்யவும், அரசு மானியம் மற்றும் பட்டா மாறுதல் ஆகியவற்றினை செய்ய மேற்படி வருவாய்த்துறை நத்தம் சம்மந்தப்பட்ட ஆவணத்தில் நிறுத்தப்பட்டுள்ளது என்பது இடையூறாகவும், என் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையிலும் அமைந்துள்ளதால் உடனடியாக அதை சரிசெய்ய உத்திரவிட கோரி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களிடத்தில் கடந்த 13.07.2026ந் தேதி தேவையான ஆவணங்களை இணைத்து மனு செய்தேன். அதேபோல் முருங்கியாம்பாளையம் கிராம அலுவலர் மற்றும் சிவகிரி நில வருவாய் ஆய்வாளர் ஆகியோர்களை சந்தித்து நீதிமன்ற தீர்ப்பின் நகல் மற்றும் இதர ஆவணங்களை கொடுத்து விபரங்களை சொன்னேன். அவர்கள் இதுசம்மந்தமாக வருவாய் ஆவணங்களை பார்வையிட்டு நான் சொன்ன விபரங்கள் சரியாக இருந்தப்படியால் தக்க அறிக்கையினை தாசில்தார்

கொடுமுடி அவர்களுக்கு அனுப்பிவிட்டனர். அதன்பின் எனது கோரிக்கை சம்மந்தமாக கொடுமுடி தாலுக்கா அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த அலுவலர்களையும், வட்டாட்சியர் அவர்களையும் சந்தித்து எனது கோரிக்கை நிலைப்பாடு குறித்து விசாரித்து வந்தேன். கொடுமுடி தாசில்தார் திருமதி.பரிமளாதேவி அவர்கள் கள ஆய்விற்காக செப்டம்பர் மாத கடைசியில் வந்தார். கள ஆய்வு செய்துவிட்டு சீக்கரம் முடித்துவிடலாம் என்றும், ஆர்.டி.ஓ. ஆபீஸ்க்கும் செலவு இருக்கிறது, ஏக்கருக்கு இவ்வளவுனு செலவாகும். ஆபீசுக்கு வாங்க பேசிக்கலாம் என்று சொன்னார். அதன்பின்னர் கடந்த 01.10.2026-ந் தேதி மாலை கொடுமுடி தாலுக்கா அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த தாசில்தார் திருமதி.பரிமளாதேவி அவர்களை சந்தித்தேன். அவர் என்னுடைய பைலை மூவ் செய்வதற்கு ரூ.30,000/- தனக்கு கொடுக்க வேண்டும் என்றும், அலுவலகத்தில் பணிபுரியும் மேலும் இரண்டு அலுவலர்களுக்கு ரூ.5000/- மற்றும் ரூ.2000/-ம் என சேர்த்து மொத்தம் ரூ.37,000/- கொடுத்தால்தான் மேல் நடவடிக்கைக்காக ஈரோடு ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க முடியும் என்றும், அதுபோக ஆர்.டி.ஓ. ஆபிசுக்கும் தனியாக செலவாகும் என்று கூறினார். நான் வீட்டில் கலந்து பேசிவிட்டு பின்னர் வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பின்னர் 06.10.2026-ந் தேதி தாலுக்கா அலுவலகத்திற்கு மதியம் சுமார் 01.30 மணியளவில் சென்று தாசில்தார் பரிமளாதேவி அவர்களை சந்தித்தேன். அவரிடம் ஆர்.டி.ஓ.ஆபிஸ் செலவை நான் தனியாக பார்த்துக்கொள்கிறேன், நீங்கள் கேட்டத்தொகையில் ஏதாவது குறைக்க முடியுமா என்று கேட்டப்போது ஏற்கனவே குறைத்துதான் கேட்டு இருக்கேன், இதற்குமேல் குறைக்கமுடியாது என்று சொன்னார். வேறு வழி இல்லாததால் சரி என்று ஒப்புக்கொண்டேன். பணம் கொண்டு வந்திருந்தால் இப்போதே கொடுங்க என்று கேட்டார். நான் தற்போது பணம் கையில் இல்லை ரெடி செய்து கொண்டு நாளை வருகிறேன் என்று சொன்னபோது, அவருடைய செல்போன் எண்.9976025123 என்ற எண்ணினை கொடுத்தார். ரிங் விடும்படி சொன்னார் நான் ரிங்விட்டு கட் செய்துவிட்டேன். நாளை பணம் ரூ.37,000/-ஐ எடுத்துக்கொண்டு, போன்செய்துவிட்டு வரும்படியும், எங்கே, எப்படி, யாரிடம் கொடுக்க வேண்டும் என்பதை தான் சொல்வதாகவும் சொன்னார். நான் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். மறுநாள் எனது நெருங்கிய உறவினர் ஒருவர் இறந்துவிட்டப்படியால் அன்றைய தினம் செல்லமுடியவில்லை. பிறகு நான் யோசித்து பார்த்ததில் தாசில்தார் அவர்கள் லஞ்சமாக கேட்கும் ரூ.37000/-ஐ கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே எனது சொத்தை பொறுத்து வருவாய்த்துறை நத்தம் சம்மந்தப்பட்ட ஆவணத்தில் நிறுத்தப்பட்டது என்பதை சரிசெய்து கொடுக்க வேண்டிய எனது மனுவின் மீது நடவடிக்கை மேற்கொண்டு ஆர்.டி.ஓ. ஈரோடு அவர்களுக்கு மேலனுப்ப என்னிடம் லஞ்சமாக ரூ.37000/- கேட்கும் கொடுமுடி தாசில்தார்

திருமதி.பரிமளாதேவி மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இப்படிக்கு (Sd xxxxxxxxxx) 13.10.2026.

Madam, Received the above said computer typed complaint on 13.10.2026 at 06.00 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The reliability and the antecedents of the complainant were found to be genuine and the accused reputation was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.09/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (amendment) Act, 2018 today on 13.10.2026 at 07.00 hrs. Sd/- (xxxxxxxxxx) 13.10.2026 K.Shanthi, Deputy of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.C.Sivasiranjeevi S/o Late. Chellamuthu, D.No.32, Poolavalasu, Murungiyampalayam Village, Thandampalayam Post, Sivagiri Via, Kodumudi Taluk, Erode District is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

13/10/2026

(K.Shanthi)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.